WEBSTERS ACADAMY
PEER GROUP CLASSES
GOOD SHED ROAD,
VAVUNIYA.

ACCOUNTING

வழுக்களைத் திருத்துதல்



RECTIFICATION OF ERRORS

COMPOSED BY

K.T.SEELAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) சுதாகர் நிறுவனத்தின் பரீட்சை மீதியைத் தயாரித்த போது அவ் பரீட்சை மீதியானது இணங்கவில்லை. இதற்குப் பின்வரும் காரணங்கள் இனங்காணப்பட்டன.

- கொள்வனவு 5000/= கொள்வனவுக் கணக்கில் 500/= எனப் பதியப் பட்டுள்ளது.
- S.K.ராஜனிடம் இருந்து கிடைத்த காசு 425/= S. ராதாவின் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
- தளபாடம் வாங்கியது 1900/= தளபாடம் திருத்துதல் கணக்கில் பதியப் பட்டுள்ளது.
- மின்சாரம் 1250/= மின்சாரக் கணக்கில் இருமுறை பதியப்பட்டுள்ளது.
- விளம்பரம் 2350/= விளம்பரக் கணக்கில் 3250/= எனப் பதியப்பட்டுள்ளது.
- விற்பனைப் பட்டியல் ஒன்று ஏடுகளில் இருந்து முற்றாகத் தவற விடப்பட்டுள்ளது.
- உட்திருப்பம் நாளேட்டின் கூட்டுத்தொகை 2125/= காசேட்டில் பதியப் பட்டுள்ளது.
- குரேயிடம் இருந்து கிடைத்த காசு 1100/= காசேட்டில் சரியாகப் பதியப்பட்டபோதும் குரே கணக்கில் இது தொடர்பான பதிவுகள் இடம்பெறவில்லை.
- பெற்ற வாடகை 1000/= கொடுத்த வாடகைக் கணக்கில் 100/= என செலவு வைக்கப்பட்டுள்ளது.
- உரிமையாளன் பேரில் செலுத்தப்பட்ட காப்புறுதி 750/= காப்புறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

02) சுடர் ஒளி நிறுவனத்தின் பரீட்சை மீதியானது இணங்கவில்லை. அதற்கு பின்வரும் காரணங்கள்

- செலவுத்தாள் ஒன்று மொத்த மீதி 975/= ஏடுகளில் இருந்து முற்றாகத் தவறவிடப்பட்டுள்ளது.
- வெளித்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகையானது 165/= ஆகக் குறைத்துப் பதியப்பட்டுள்ளது.
- பெற்றதரகு 1875/= தரகுக் கணக்கில் 1785/= என வரவு வைக்கப்பட்டுள்ளது.
- வாடகைக் கணக்கு மீதி 950/= பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப் படவில்லை.
- சம்பளம் 3250/= பரீட்சை மீதியில் 3150/= எனப் பதியப்பட்டுள்ளது.
- மோட்டார் வாங்கிய 5250/= மோட்டார் திருத்தக் கணக்குப் பியப்பட் டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடன்பட்டோர் காசோலை 2450/= வங்கியால் மறுக்கப்பட்டது கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசோலை எனப் பதியப்பட்டுள்ளது.
- ரத்துச் செய்து கொடுத்த கழிவு 250/= கடன்பட்டோர் கணக்கில் பதியப்பட்டபோதும் வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை.
- அறவிடமுடியாக்கடன் 1150/= க்கு உரிய எப்பதிவும் இடம்பெறவில்லை.

03) நிவ்யா நிறுவனத்தின் பரீட்சைமீது இணங்கவில்லை. இதற்குப் பின்வரும் காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

- உரிமையாளர் 2600/= பெறுமதியான பொருட்களை எடுத்துள்ளான். இதுபற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
- பெற்ற தரகு 2500/= கொடுத்த தரகுக் கணக்கில் 5200/= என வரவு வைக்கப்பட்டுள்ளது.
- கொள்வனவு நாளேடு 1200/= குறைவாக கூட்டப்பட்டுள்ளது.
- சம்பளம் 2500/= பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.
- வரவுத்தாள் 175/= உரிய ஏடுகளில் பதியப்படவில்லை.
- கடன்பட்டோருக்குக் கொடுத்த கழிவு 150/= கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- இறுதிச் சரக்கு 750/= ஆல் குறைத்துக் கூட்டப்பட்டுள்ளது.
- சம்பளம் 3700/= காசேட்டில் 7300/= எனப் பதியப்பட்டுள்ளது.
- காசேட்டின் வங்கி மீதி 250/= ஆல் கூடுதலாகவுள்ளது.
- காசோலை மறுப்புக் கட்டணம் 200/= வுக்கு உரிய பதிவு காசேட்டில் இடம்பெற்ற போதும் வேறுபதிவுகள் இடம்பெறவில்லை.

04) ஜோதிகா நிறுவனத்தின் 31.12.1999 இல் உள்ளபடியான ஐந்தொகை

மூலதனம்	175 000		காணி கட்டடம்	50 000
தேறிய இலாபம்	25 000		மோட்டார்	40 000
	200 000		தளபாடம்	20 000
(-) பற்று	(10 000)	190 000	முதலீடு	60 000
நீண்டகாலகடன்		70 000		170 000
கடன்கொடுத்தோர்		40 000	இருப்பு	35 000
			கடன்பட்டோர்	30 000
			வங்கி	55 000
			தொங்கல்	10 000
		300 000		300 000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I மேற்படி ஐந்தொகையில் சமப்படாத காரணத்தினால் தொங்கல் கணக்கு மூலம் சமப்படுத்தப்பட்டுள்ளது. தொங்கல் ஏற்படுவதற்குப் பின்வரும் காரணங்களாக அமைந்தது.

- மோட்டார் வாங்கியது 30 000/= மோட்டார் பழுது பார்த்தல் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- வாடகை 2000/= இரண்டு கணக்குகளும் இரண்டு தடவை பதியப்பட்டுள்ளது.
- மின்சாரம் 750/= மின்சாரக் கணக்கில் இரண்டு தடவை வரவு வைக்கப்பட்டுள்ளது.
- கொள்வனவுப் பட்டியல் 3000/= ஏடுகளில் இருந்து முற்றாகத் தவற விடப்பட்டுள்ளது.
- சம்பளம் 4750/= சம்பளக் கணக்கில் பதியப்படவில்லை.
- உட்திரும்பல் ரவியிடம் இருந்து 2750/= ரவி கணக்கில் 750/= எனவும் உட்திரும்பல் கணக்கு 275/= பதியப்பட்டுள்ளது.
- விளம்பரம் 25255/= பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.
- பெற்ற கழிவு 1500/= கொடுத்த கழிவுக் கணக்கில் 150/= என வரவு வைக்கப்பட்டுள்ளது.
- காசேட்டின் வரவுமீதியானது குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது 2650/=
- பொருள் பற்று 1500/= ஏடுகளில் பதியப்படவில்லை.

05) ஜெகதா அன்ட் கம்பனியின் 31 மார்ச் 1999 இலுள்ளவாறான பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கற் கணக்கில் பதியப்பட்டது. கணக்குப் பரிசோதனையின் போது பின்வரும் தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

- இயந்திரத்திருத்தம் 400/= ஆனது இயந்திரக்கணக்கில் பதியப்பட்டுள்ளது.
- விற்பனை நாளேடு 1000/= வால் குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
- பீற்றருக்கான கொடுப்பனவு 1350/= ஆனது அவரின் தனிப்பட்ட கணக்கில் 3150/= என வரவு வைக்கப்பட்டுள்ளது.
- பெற்ற கழிவு 525/= ஆனது கொடுத்த கழிவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது.
- பற்றுக் கணக்கு மீதி 6000/= ஆனது பரீட்சை மீதியின் செலவில் காப்படுகிறது.
- பாலசிங்கத்தினால் திருப்பியனுப்பிய சரக்கு 850/= ஆனது அவரின் கணக்கில் சரியாகப் பதிப்பட்டுள்ளது. ஆனால் உட்திரும்பிய நாளேட்டில் 1850/= ஆகப் பதியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருவனவைகளைச் செய்க.

(1) இக் கம்பனி கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுவதில்லை எனக் கருதி மேற்படி தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகளைத் தருக.

(2) தொங்கல் கணக்கினைத் தயாரித்து அதன் ஆரம்ப மீதியைக் காண்க.

06) வரையறுத்த பாலா கம்பனியில் 2000 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்குகளை முடிவுறுத்தும்போது பரீட்சை மீதி சமப்படாதிருந்தது அவதானிக்கப்பட்டது. பரீட்சை மீதியில் காப்பட்ட இவ் வேறுபாட்டுத் தொகை தொங்கற் கணக்கிற்கு மாற்றப்பட்டு முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. ஐந்தொகையில் தொங்கற் கணக்கு மீதி காட்டப்பட்டு, கணிப்பீடு செய்யப்பட்ட இவ்வருட தேறிய இலாபம் 15 000/= ஆகும். அதே நேரம் இது தொடர்பான பரிசோதனையில் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

- சில்லறைக் காசேட்டின் பகுப்பாய்வு நிரலில் பிரயாணச் செலவுகள் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தும், இதன் மொத்தக் கூட்டுத்தொகை 2100/= உரிய கணக்கில் பதியப்படவில்லை.
- கொடுத்த கழிவு 3000/= பிழையாகப் பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
- விநியோகச் செலவுகள் 1500/= இக் கணக்கில் 15000/= எனப் பதிவிடப்பட்டுள்ளது.
- அலுவலக உபகரணக் கணக்கு மீதி 8500/= பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.
- பெறப்பட்ட பங்குலாபம் 3700/= ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
- கடன் தவணைப் பணமாகச் செலுத்தப்பட்ட 6000/= வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இதனுள் உள்ளடங்கியுள்ள வட்டித்தொகை 1000/= மாத்திரமாகும்
- அலுவலகக் கட்டிடத்திற்குச் சாயம் பூசியதற்காகச் செலவிடப்பட்ட 3500/= கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படுவது

(1) மேற்கூறப்பட்டுள்ள தவறுகளைத் திருத்துவதற்குத் தேவையான நாட்குறிப்பு பதிவுகளைத் தருக.

(2) தொங்கல் கணக்கைத் தயாரிக்குக.

(3) மேற்கூறப்பட்ட தவறுகளைத் திருத்திய பின்பு உள்ள சரியான இலபத்தை/நட்டத்தைக் கணிப்பிடுக.

07) 31 மார்ச் 98 இல் அருணோதயா வியாபாரிகளின் பரீட்சை மீதியில் வேறுபாடுகள் காணப்பட்டது. பரீட்சை மீதியினைச் சமப்படுத்துவதற்கு தொங்கல் கணக்கு ஒன்று திறக்கப்பட்டது. அதன் பின்னர் பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

- பரதன் என்பவரிடம் இருந்து கிடைத்த 5,400/= காசு, அவரது கணக்கில் வரவில் 4,500/= எனப் பதியப்பட்டது.
- 01.04.97 இல் 120,000/= பொறி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுக் கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது. தேய்மானம் தொடர்பில் நேர்கோட்டு முறையில் 10% தேய்விடும் இந்நிறுவனத்தின் கொள்கையாகும்.
- வழங்குனரான மோகனிடம் இருந்து பெற்றகழிவானது 3,500/= காசேட்டின் பெற்ற கழிவு நிரலில் பதியப்பட்டிருந்தபோதிலும், ஆள்குறிக்கும் கணக்கில் பதியப்படவில்லை.
- மோட்டார் பழுது பார்த்தற் செலவு 1,680/= ஆனது மோட்டார் கணக்கில் சரியான பக்கதில் 1,860/= எனப் பதியப்பட்டது.
- 4,500/= வுக்கு செய்யப்பட்ட உடன் காசு விற்பனையானது விற்பனைக் கணக்கில் 7,300/= மீதியைக் காட்டியபோதும் இது பரீட்சை மீதிக்கு மாற்றத் தவறவிடப்பட்டது.

வேண்டப்படுவது:

(1) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு.

(2) தொங்கல் கணக்கு எவ்வாறு பதிவழிக்கப்படும் என்பதனைக் காட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08) கதிர் அன்கோவின் 31.12.98 இல் தயாரிக்கப்பட்ட ஐந்தொகை வருமாறு

பொறுப்பு	தொகை	தொகை	சொத்து	தொகை	தொகை
மூலதனம்		100 000	தளபாடம் (தேறியது)	45 000	
தேறிய இலாபம்	30000		மோட்டார் (தேறியது)	55 000	
பற்று	(2,500)	27,500	இறுதியிருப்பு	15000	
		127 500	கடன்பட்டோர் 20 000		
கடன்கொடுத்தோர்		15 000	அவிக ஏற்பாடு (5 000)		
செல்மதி மின்சாரம்		500	முற்பண விளம்பரம்	15 000	
காட்டுறுதி		1 100	காசு	20000	
வங்கி மேபற்று		11 000	தொங்கல்	4 000	
		155 000		155 000	

மேற்படி ஐந்தொகையானது தவறுகளுடன் தயாரிக்கப்பட்ட முடிவுக் கணக்கு விபரங்களையும் உள்ளடக்கி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, தவறுக்கான காரணங்கள் பின்வருமாறு இனங்காணப்பட்டன.

- 4000/= க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாடம் ஒன்று கொள்வனவாகக் கருதி ஏடுகளில் பதியப்பட்டிருந்தது. இக் கொள்வனவு 01.01.98 இல் இடம் பெற்றது.
- 01.07.98 இல் புத்தகப் பெறுமதி பூச்சியமாக உள்ள மோட்டார் ஒன்று 5000/= க்கு விற்கப்பட்டு விற்பனையாகக் கருதி ஏடுகளில் பதியப்பட்டது.
- நிறுவனம் சகல நிலையான சொத்துக்களுக்கும் 10% ஒழுங்குபாக முறையில் பெறுமானத் தேய்வு இடுவதைக் கணக்கீட்டுக் கொள்கையாகக் கொண்டுள்ளது.
- இவ்வாண்டு அறவிடமுடியாக் கடனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டவருள் 1500/= தருமதியான கடன்பட்டோர் முறிவடைந்து விட்டார் என அறியப்பட்டுள்ளது. இது தொடர்பான பதிவுகள் எதுவும் இடம்பெறவில்லை.
- தொங்கல் கணக்குஎன்பது விற்பனைத் திரும்பல் நாளேட்டின் கூட்டுத் தொகை தொடர்பானது ஆகும்.
- முற்பணமாக செலுத்தப்பட்ட வாடகை 750/= இவ்வாண்டு வாடகையாகக் கருதி ஏடுகளில் பதியப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படுவது

1) பிழைகளைத் திருத்தும் நாட்குறிப்பு.
2) இலாபம் சீராக்கும் கூற்று.
3) திருத்தப்பட்ட ஐந்தொகை.

09) பின்வருவன எவ்வகையான வழுக்கள் என்பதைக் கூறி இவற்றைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகளைத் தருக.

- செல்விக்கு விற்பனை 15 000/= எந்த ஏடுகளிலும் பதிவு செய்யப்பட வில்லை.
- பாலுவிடம் கொள்வனவு 48 000/= கொள்வனவு நாளேட்டில் இரு தடவை பதியப்பட்டுள்ளது.
- உள்முகவருதிகள் நாளேடு 1000/= குறைத்துக் கூட்டப்பட்டது.
- வங்கியில் உள்ள வரவு மீதியானது 12 000/= அடுத்த பக்கத்திற்கு கொண்டு சென்ற போது வரவுப் பக்கத்தில் 21 000/= எனப் பதியப் பட்டது.
- காசேட்டின் வரவுப் பக்க கழிவு நிரல் கூட்டுத்தொகை 8000/= பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
- திரு.மு.மொகமட்டிற்கு விற்பனை 5 000/= திருமதி வீ.மொகமட் கணக்கில் வரவில் பதியப்பட்டது.
- ஒலிவருக்கு விற்பனை 42 000/= அவரது கணக்கில் 4200/= எனப் பதியப்பட்டது
- ராமிடம் பெற்ற கடனுக்குப் பகுதியாக செலுத்திய 10 000/= ஆள் குறிக்கும் (ராம்) கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
- மோட்டார் வாகன மாதாந்த கழுவும் கட்டணம் 2 000/= உள்வந்த வண்டிக் கூலியுடன் சேர்க்கப்பட்டது.
- பொறியை நிறுவனத்திற்குக் கொண்டு வரக் கொடுத்த வண்டிக் கூலி 4000/= உள்வந்த வண்டிக் கூலியுடன் சேர்க்கப்பட்டது.
- மின்சாரக் கணக்கு மீதி 24 000/= பரீட்சை மீதிக்குக் கொண்டு வரப் படவில்லை.
- சென்ற வருட சென்மதி சம்பளமான 2 000/= சம்பளக் கணக்கில் வரவு மீதியாகக் கொண்டு வரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) புஞ்சிபண்டா நிறுவனத்தின் 31.12.1990 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு.

அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு	210	
அறவிடமுடியாக் கடன்	400	
விற்பனை விநியோகச் செலவு	735	
நிலைய நிர்வாகச் செலவு	3 060	
இறுதியிருப்பு	500	
ஆரம்ப இருப்பு	392	
கொள்வனவு	18 385	
மூலதனம்		26 815
பற்று	2 800	
கடன் கொடுத்தோர்		5 160
கடன்பட்டோர்	4 090	
தளபாடம்	10 000	
மோட்டார்	11 375	
பெற்ற கழிவு	25	
விற்பனை		24 347
தொங்கல்	4 350	
	56 322	56 322

மேற்கூறி பரீட்சை மீதி அனுபவம் அற்ற கணக்குப் பதிவாளரினால் தயாரிக் கப்பட்டதாகும். பரீட்சை மீதி இணங்காமைக்கான காரணம் பற்றி பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

- காசு கொள்வனவு 2500/= நாளேட்டில் இருந்து பேரேட்டிற்கு மாற்றப்பட வில்லை.
- சுகந்தன் என்ற விநியோகஸ்தர் விற்பனைத் திரும்பல் தொடர்பாக அனுப்பிய செலவுத்தாள் 225/= தொடர்பாக எப்பதிவும் ஏடுகளில் இடம் பெறவில்லை.
- கொள்வனவின்போது தமது வீட்டுப் பாவனைக்க்காகவும் புஞ்சிபண்டா பொருட்களைக் கொள்வனவு செய்தார். பின்னர் அவற்றை எடுத்து கொண்ட போது பற்றுக் கணக்கில் மட்டும் 450/= என வரவு வைக்கப்பட்டது.
- கொள்வனவு நாளேடு 3250/= ஆல் குறைத்துக் கூட்டப்பட்டது.
- வெற்றுக் கொள்கலன் விற்பனை 150/= காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழ) சென்ற ஆண்டு நடப்பு ஆண்டு தொடர்பில் செலுத்தப்பட்ட 200/= முற்பண வாடகை கீழ் கொண்டு வரப்படவில்லை.

வேண்டப்படுவது:

1) பிழைகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்பும் தொங்கல் கணக்கும்.
2) பிழைகளைத் திருத்திய பின் பரீட்சை மீதி.

11) காந்தன் நிறுவனத்தின் 31.12.98 இல் உள்ளபடியான ஐந்தொகை வருமாறு

மூலதனம்	75 000	நிலையான சொத்து	கொள்விலை	திரண்ட பெறுமானத் தேய்வு	தேறிய பெறுமானம்
தேறிய இலாபம்	4 500				
	79 500				
பற்று	(500)	காணி கட்டடம்	4 500	900	3 600
	79 000	மோட்டார்	40 000	10 000	30 000
			44 500	10 900	33 600
நடைமுறைப் பொறுப்பு		**நடைமுறைச் சொத்து**			
கடன் கொடுத்தோர்	10 000	இருப்பு		20 000	
காப்புறுதி	1 000	கடன்பட்டோர்		20 000	
		வாடகை		800	
		காசு		11 600	
		தொங்கல்		4 000	56 400
	90 000				90 000

மேற்காட்டிய ஐந்தொகையில் கீழ்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன.

- இறுதியிருப்பின் சந்தைவிலை 20 000/= கொள்விலை 18 000/= ஆகும்.
- சென்ற ஆண்டு சென்மதியாக இருந்த மின்சாரம் 240/= மின்சாரக் கணக்கிற்கு வரவு மீதியாக கொண்டு வரப்பட்டது.
- கொள்வனவுக் கணக்கு 3000/= குறைத்துக் கூட்டப்பட்டது.
- 01.01.98 இல் விற்பனைக்காக வாங்கிய மோட்டார் 5000/= பெறுமதியானது இன்னும் விற்கப்படவில்லை. இது மோட்டார் கணக்குடன் சேர்க்கப்பட்டுள்ளது. மோட்டாரின் பெறுமானத் தேய்வு முறையில் 5% ஆகும்.
- உட்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை 410/= வெளித்திரும்பல் கணக்கில் செலவில் பதியப்பட்டது.
- உரிமையாளன் தனது சொந்தப் பணத்தில் இருந்து செலுத்திய வியாபாரக் காப்புறுதி 100/= காப்புறுதிக் கணக்கில் மட்டுமே பதியப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான கூட்டுத்தொகை 20 760/= ஆகும்.

வேண்டப்படுவது:

1) தொங்கல் கணக்கும் பிழைகளைத் திருத்தும் நாட்குறிப்பும்.
2) திருத்திய பின் ஐந்தொகை.

12) காண்டீபன் 1998 மார்ச் 31 ஆம் திகதியன்று தனது பரீட்சை மீதியைத் தயாரித்திருந்த போதும் அது இணங்கவில்லை. இணங்காமைக்கான வித்தியாசம் தொங்கல் கணக்கில் இட்டதன் மூலம் பரீட்சை மீதியை இணங்கச் செய்து முடிவுக் கணக்குகளைத் தயாரித்தபின் பின்வரும் ஐந்தொகையினை அவர் தயாரித்தார்.

	ரூபா			ரூபா
ஆரம்ப மூலதனம்	300 000	நிலையான சொத்து		
(+) தேறிய இலாபம்	40 000	தளபாடம் பொருத்துக்கள்		50 000
	340 000	மோட்டார் உபகரணம்		230 000
(-) பற்று	(10 000)	நடப்புச் சொத்து		
	330 000	இருப்பு	40 000	
கடன்கொடுத்தோர்	20 000	கடன்பட்டோர்	10 000	
	350 000	வங்கி	15 000	
		காசு	5 000	70 000
	350 000			350 000

தொங்கல் கணக்கு மீதி இலாப நட்டக்கணக்கிலிடப்பட்டிருந்தது பின்னர் தனது ஏடுகளை செவ்வை பார்த்த போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

- 10 000/= க்கான தளபாடம் பொருத்துகள் கொள்வனவு செய்யப்பட்டமை கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டது. (நிலையான சொத்துக் கொள்வனவு செய்யும் ஆண்டில் பெறுமானத் தேய்வு இடப்படுவதில்லை)
- கடன்பட்டோர் ஒருவரிடம் இருந்து பெற்ற காசோலை 3000/= தவறுதலாக ஏடுகள் எதிலும் பதியப்படவில்லை.
- வங்கிக் கட்டணம் 1 500/= காசேட்டில் காணப்பட்ட போதிலும் பேரேட்டில் வங்கிக் கட்டணம் கணக்கில் பதியப்படவில்லை.
- அனுமதித்த கழிவு 750 பெற்ற கழிவுக் கணக்கில் 1 750/= எனப் பதியப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➙ நாதனிடம் கொள்வனவு செய்த தொகை 3 000/= கொள்வனவு நாளேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்த போதிலும் நாதன் கணக்கில் 300/= எனப் பதியப்பட்டது.

வேண்டப்படுவது.

(1) அவசியமான திருத்தங்களுடன் தொங்கல் கணக்கு

(2) திருத்திய இலாப நட்டக்கணக்கு
(திருத்தங்களுக்கான பதிவுகள் மட்டும் உள்ளடங்கலாம்)

(3) திருத்திய ஐந்தொகை.

13) வரையறுத்த சிங்கம் கம்பனியின் 98.12.31 இல் தயாரிக்கப்பட்ட ஐந்தொகை வருமாறு.

இறையில் காணி	3 212 700
பொறிவிருட்சம பொறித் தொகுதி	250 000
மோட்டார் வாகனம்	45 000
நன்மதிப்பு	80 000
இறுதி இருப்பு	75 000
கடன்பட்டோர்	400 000
காசேட்டின்படி காசு மீதி	37 000
	4505 200

சாதாரண பங்கு மூலதனம்	2750 000
ஒதுக்கீடுகள்	525 000
வியாபார இலாப நட்டக் க/கு(தேறியலாபம்)	345 000
10% திபெஞ்சர்கள்	800 000
அட்டுறுவான செலவு	2 500
வங்கி மேலதிகப் பற்று	1 560
தொங்கல் கணக்கு	81 140
	4505 200

தொங்கல் கணக்கில் நிலுவை இருப்பதற்கான காரணங்களை அறிவதற்குப் பேரேட்டுக் கணக்குகளை செவ்வை பார்க்கையில் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

➙ கொள்வனவு நாளேட்டின் மொத்த 398 540/= வானது 389 450/= என முன் கொண்டு செல்லப்பட்டு இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

→ கொள்வனவுக் கணக்கின் நிலுவையானது 93 780/= இனால மிகையாக இருந்தது.

→ கைவசம் உள்ளகாசு 3 750/= வாக இருத்தல் வேண்டும்.

→ பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டபோது 62 450/= நிலையான வைப்பு அதில் இடம்பெறவில்லை.

→ 7 500/=க்கான கொள்வனவுக் கிரயப்பட்டியல் ஒன்று கொள்வனவுக் கணக்கில் இடம் பெற்றிருந்த போதிலும் பெயருள் கணக்கில் இடம்பெறவில்லை.

→ விற்பனை நாளேட்டிலுள்ள 1 250/= கான உருப்படி விற்பனைக் கணக்கில் 7 250/= எனப் பதியப்பட்டிருந்தது.

→ 98.12.31 இல் அட்டுறுவாடகை ரூபா 8 950/= ஆகும். ஆனால் இத் தொகை கணக்குகளில் பதியப்படவில்லை.

→ விற்பனை நாளேட்டில் உள்ள ஒருதாளின் கூட்டுத்தொகை 15 700/= விற்பனைக் கணக்கிற்கு மாற்றத் தவற விடப்பட்டுள்ளது.

→ ஆண்டின் போது 50 000/= கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் கார் பழு பார்த்தல் கணக்கில் பதியப்பட்டது.

→ சில்வாவிற்கு விற்ற 500/= பெறுமதியான பண்டங்கள் சில்வா கணக்கில் 500/= செலவில் வைக்கப்பட்டிருந்தது. (இந்நிறுவனம் கட்டுப்பாட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதில்லை எனக் கருதுக)

வேண்டப்படுவது.

1) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு.
2) வழுக்களைத் திருத்தியபின் தொங்கல் கணக்கு.
3) சரியான இலாபம் காட்டும் இலாபம் சீராக்கும் கணக்கு.
4) எல்லாத் திருத்தங்களின் பின்னர் முறையான ஐந்தொகை.

05) 1998 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதிரை கம்பனியின் முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. அதன் பிரகாரம் அவ்வாண்டிற்கான தேறியலாபம் 102 579/= இருந்த அவ் ஆண்டிலே பயன்படுத்தப்பட்ட மூலதனம் 446 739/= இவை தொங்கல் கணக்கு ஒன்றிலே இருந்த வரவு நிலுவையான 479/= கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டன. கணக்காய்வின்போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

→ சில்வா என்பவருக்கு 570/= வழங்கப்பட்ட செலவுத்தாள் விற்பனைத் திரும்பல் கணக்கிலோ, சில்வா கணக்கிலோ பதியப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொள்வனத்தின ஏட்டின் ஒருபக்க கூட்டுத்தொ 49 276 50/=சதமாக முன் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஆனால் சென்மதியாளர் கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளது.
- 5 880/= கடன் விற்பனைகள் விற்பனை நாளேட்டிலோ அல்லது வருமதியாளர் கணக்கிலோ பதியப்படவில்லை.
- 1998 ஜனவரி மாதத்திற்கான தொலைபேசி உண்டியல் தொகையான 189/= செலுத்தப்பட்டுள்ளது. காசேட்டில் இவ் விடயம் சரியாகப் பதியப்பட்டு இருந்த போதிலும் தொலைபேசிக் கணக்கில் பதியப் படவில்லை.
- முடிவுத் தொக்குகளில் சேர்க்கப்பட்டுள்ள 900/= பெறுமதியான பண்டங்கள் முற்றாக சேதமடைந்து உள்ளன. அவற்றுக்குவிற்பனைப் பெறுமானம் இல்லை.
- கழிவீடுகளாகப் பெறப்பட்ட 2 055/= தொகையானது தவறுதலாக அனுமதிக்கப்பட்ட கழிவீட்டுக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
- கமால் என்பவரிடமிருந்து பெறவேண்டிய 2 469/= கமால்ஆதிரை கம்பனிக்கு ஆற்றிய சேவைக்காக அக் கம்பனி கமலுக்கு செலுத்த வேண்டி இருந்த 5 000/= தொகையில் இருந்து எதிரீடு செய்யப்பட்டு மீதித் தொகையான 2 531/= செலுத்தப்பட்டது. எனினும் 2 469/= தீர்க்கப்பட்டதற்கான பதிவுகள் எதுவும் பேரேட்டில் பதிவு செய்யப் படவில்லை.
- ஆதிரை இவ்வாண்டுக் காலத்தில் தனது சொந்தச் செலவுக்காக அலுவலகத்தில் 1 500/= எடுத்துள்ளார். இதனை ஈடு செய்து ஏடுகளைச் சமப்படுத்துவதற்காகக் கணக்குப் பதிவாளர் காசு விற்பனை 1 500/= வினை குறைத்து எழுதி இருந்தார்.
- முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்ட துவிச்சக்கரவண்டி 450/= வுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. விற்பனை மூலம் கிடைத்த பணம் வாகனங்கள் கணக்கில் செலு வைக்கப்பட்டிருந்தது. **வேண்டப்படுவது:**

(1) தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டபின் சரியான தேறிய லாபத்தைக் கணிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிரயோகிக்கப்பட்ட மூலதனத்தைக் கணிக்க.

(3) தொங்கல் கணக்கின் நிலுவை பதிவழிக்கப்படுவது எங்ஙனம் என்பதைக் காட்டுக.

06) இராதா என்பவர் 31.03.95 இல் தனது வியாபார நிலையத்தின் பரீட்சை மீதியைத் தயாரித்த போது அது சமப்படாமையால் தொங்கல் கணக்கு உருவாக்கி அதனைச் சமப்படுத்தினார். இவ்வழுக்களுடன் முடிவுக்கணக்குகளைத் தயாரித்தபோது பெறப்பட்ட தேறியலாபம் 28 300/= ஆகும். பின்னர் பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

- விற்பனைக் கணக்கைகக் கூட்டியபோது 1 000/= குறைத்துக் கூட்டப்பட்டது.
- கொடுத்த கழிவு 500/= பெற்ற கழிவு 300/= என காசேட்டில் இருந்த போதிலும் இவை பேரேட்டுக்கு மாற்றியபோது கழிவுக் கணக்குகள் மாற்றிப்பதியப்பட்டுள்ளது.
- உரிமையாளர் பற்றிய சரக்கு 850/= பற்றி கணக்குகள் எதிலும் பதியப்படவில்லை.
- உட்திரும்பல் சரக்கு 750/= உட்திரும்பல் கணக்கில் சரியாக பதியப்பட்டுள்ள போதிலும் எதிர்ப் பதிவு 570/= எனப் பதியப் பட்டுள்ளது.
- கடன்பட்டோர் ஒருவரிடம் பெற்ற 637/= காசுக் கணக்கில்சரியாகப் பதியப்பட்ட போதிலும் கடன்பட்டோன் ஆள் குறிக்கும். கணக்கில் 673/= என வரவு வைக்கப்பட்டது.
- 28.03.96 இல் கண்ணன் என்பரிடம் கொள்வனவு செய்த 6 000/= பெறுமதியான கொள்வனவு, கொள்வனவு ஏடுகளில் பதியப்பட்டுள்ள போதிலும் அது இன்னமும் வழிச்சரக்காக உள்ளது.
- இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்து அதை எநிறுவியதற்கான செலவு 1 500/= பொதுச் செலவுக்கணக்கில் பதியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்க:

(1) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு

(2) தொங்கல் கணக்கு

(3) இலாபம் திருத்தும் கூற்று.

07) சரண நிறுவனத்திற்காக 1997.04.30 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முன்வரையப்பட்ட இலாப நட்டக் கணக்கைத் தயாரிக்கும் போது பரீட்சை மீதியில் காணப்பட்ட வித்தியாசம் தொங்கல் கணக்கொன்றில் பதிவு செய்ததோடு ஐந்தொகையிலும் காட்டப்பட்டது. முன் வரையப்பட்ட கணக்கில் இலாபம் 78 260/= ஆக இருந்தது. (இக்கம்பனி கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணவில்லை)

- 1996.04.30 இல் முன் செலுத்தப்பட்டிருந்த இறைகளின் 490/=இறைகள் கணக்கிலே வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆனால் விநியோகத்தர்கள் கணக்கில் 1 672/= ஆகச் செலவு வைக்கப்பட்டிருந்தது.
- வியாபாரப் பாவனைக்காக 1996.05.01 இல் கொள்வனவு செய்யப்பட்ட 9 800/= கிரயமான உபகரணமொன்று கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. (நிறுவனம் ஆண்டுதோறும் உபகரணங்களுக்கு கிரயத்தில் 20% ஐ பெறுமானத் தேய்வாக வழங்கியது)
- முடிவுக் கையிருப்புக் கணக்கிலே 2 171/= பெறுமதியானஉருப்படிகள் முற்றாக விடுபட்டிருந்தன.
- வாடகைப் பெறுவனவுக் கணக்கிலிருந்த 1 000/= செலவுமீதி பரீட்சை மீதியிலிருந்து தவறவிடப்பட்டிருந்தது.
- கூலிகள் கணக்கின் வரவுப் பக்கதில் 100/= குறைவாகப் பதியப்பட்டிருந்தன.

மேலே கூறிய தகவல்களைப் பயன்படுத்திக் கீழ்வருவனவற்றை தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றீர்.

(1) மேற் கூறப்பட்ட வழுக்களையும் தவறுகளையும் தேவையானவிடத்து சரிப்படுத்தும் வகையில் நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிக்குக

(2) வழுக்களைத் திருத்துவற்கான தொங்கல் கணக்கு.

(3) சரியான தேறிய இலாபத்தைக் காட்டுகின்ற கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) அ) பின்வரும் தொடர்களை விளக்கி, அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

1) விடுபட்டவழுக்கள் 2) இழைக்கப்பட்ட வழுக்கள்
3) கோட்பாடுகள் வழுக்கள் 4) ஈடுசெய்தல் வழுக்கள்

ஆ) 1996 ஜூன் 30 இல் இருந்தவறான தனுஜா அன்ட் கம்பனியின் பரீட்சை மீதி, இணக்கமுடையதாக அமைவில்லை. ரூபா 3,210 வித்தியாசம், தொங்கற் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. வரையப்பட்ட கணக்குகள் ரூபா 76,000 மொத்த இலபத்தையும் ரூபா 19,492 தேறிய இலாபத்தையும் காட்டியது. கணக்குப் பரிசோதனையின் போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. ரூபா 2,800 இற்கான கடன் விற்பனைகள் விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.
2. கடன்பட்ட ஒருவரான வஜிரவிடமிருந்து, பெறப்பட்ட ரூபா 1,200 காசேட்டில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது.
3. பெறப்பட்ட கழிவீடு ரூபா 740, கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறின்றிப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் அனுமதிக்கப்பட்ட கழிவீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
4. அனுமதிக்கப்பட்ட கழிவீடு ரூபா 440 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறின்றிப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் பெறப்பட்ட கழிவீட்டுக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.
5. கடன் கொடுத்த ஒருவனுக்கான மொத்தக் கொடுப்பனவு ரூபா 2,514 தவறின்றிக் காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் கடன்கொடுத்தோர். கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு ரூபா 3,504 வரவு வைக்கப்பட்டிருந்தது.
6. தேய்மானக் கணக்கு மீதி ரூபா 6,000 பரீட்சை மீதிக்கு எடுக்கப்படவில்லை

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்படுகின்றீர். மேலேயுள்ள வழுக்கள் திருத்தியமைக்கப்பட்ட பின் தொங்கற் கணக்கு.

1. 1996 ஜூன் 30 இல் முடிவுற்ற ஆண்டிற்கான திருத்தப்பட்ட மொத்த இலாபத்தையும் திருத்தப்பட்ட தேறிய இலாபத்தையும் காட்டும் கூற்று.
2. 1996 ஜூன் 30 இல் முடிவுற்ற ஆண்டிற்கான, திருத்தப்பட்ட மொத்த இலாபத்தையும் திருத்தப்பட்ட தேறிய இலாபத்தையும் காட்டும் கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) 1992 மார்ச் 31 இல் சாம்ஸன் அன்ட் கம்பனியின் பரீட்சை மீதியொன்று இணங்கவில்லை. கம்பனியின் வித்தியாசத்தைத் தொங்கல் கணக் கொன்றில் பதிந்ததுடன் ரூபா 7,500 ஆன தேறிய இலாபம் ஒன்றைக் காட்டித் தனது இறுதிக் கணக்குகளைத் தயாரித்து. தொங்கல் கணக்கின் மீதி இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படவில்லை. கணக்காய்வின் போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு தொங்கல் கணக்கின் மீதி நீக்கப்பட்டது.

1. ரூபா 450 இற்கான விற்பனைகள் கிரயப்பட்டியலொன்று ஏடுகளிலிருந்து முழுமையாக விடப்பட்டிருந்தது.
2. வங்கிக் கட்டணங்கள் ரூபா 55 காசேட்டில் பதிப்பட்டிருந்தது ஆனால் பேரேட்டில் குறிக்கப்பட வில்லை.
3. பழைய மோட்டார் வான் ஒன்றின் விற்பனை மீதான நட்டம் ரூபா 650 மோட்டார் வான் கணக்கிற் சரியாகப் பதியப்பட்டிருந்தது. ஆனால் அது ரூபா 560 ஆகத் தேய்மானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.
4. 1992 மார்ச் 31 இல் வங்கி மேலதிகப்பற்று ரூபா 940 பரீட்சை மீதியிலிருந்து விடப்பட்டிருந்தது.
5. கூலிகள் கணக்கின் வரவுப்பக்கம் ரூபா 500 எனும் தொகையால் குறைவாகக் கூட்டிக் கணக்கிடப்பட்டிருந்தது.
6. ரூபா 460 இற்கு ராணி என்பவருக்குச் செய்த பண்டங்களின் விற்பனையொன்று விற்பனைகள் நாளேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தும் ராணியின் கணக்கில் ரூபா 640 ஆக இடப்பட்டிருந்தது.

1. மேற்போந்த வழுக்களைத் திருத்துவதற்கு தற்பொழுது தேவையான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.
2. சரியான தேறிய இலாபத்தைக் கணிக்குக.

14) 1990 மார்ச் 31 ஆந் திகதி இருந்தவாறான வரையறுத்த வீஸ்வநாத் கம்பனியினது பரீட்சை நிலுவையிலிருந்து வித்தியாசமானது தொங்கற் கணக்கிற்கு மாற்றப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள வழுக்கள் அதற்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டன.

1. 8,990 ரூபாய்க்கான காசு விற்பனைகள் ரூபா9,890 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தன.
2. கொள்வனவு திரும்பல் ஏட்டில் 2,000 குறைவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (கம்பனியானது கட்டுப்பாட்டுக் கணக்குகளை வைத்திருப்பதில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குச் செலவிடப்பட்ட தொகையான ரூபா 10,500 அலுவலகச் செலவுகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
4. விற்பனைகள் தின ஏட்டில் ரூபா 5,000 கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.
5. இரத்தினசபாபதி என்பவருக்கு ரூபா 6,850 செய்யப்பட்ட கடன் விற்பனைகள் அவரது கணக்கிற் செலவு வைக்கப்பட்டிருந்தன.

இவ்வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து தொங்கற் கணக்கைக் காட்டுக.

15) கிரிதரன் சகோதரர்கள் கம்பனியின் கணக்குப் பதிவாளருக்குப் பரீட்சை மீதியை இணங்கச் செய்ய முடியவில்லை. பரீட்சை மீதி வித்தியாசத்தை அவர் தொங்கற் கணக்குக்கு மாற்றினார். பின்வரும் வழுக்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன.
   1. ரூபா 14,850 இற்கான காசு விற்பனையொன்று காசேட்டில் சரியாகப் பதியப்பட்டிருபினும் விற்பனைக் கணக்கிலே ரூபா 1,485 எனப் பதியப்பட்டிருந்தது.
   2. விற்பனை நாளேட்டின் ஒரு பக்கத்திலிருந்த ரூபா 7,850 மொத்தமானது ரூபா 8,750 என முன் கொண்டு செல்லப்பட்டது.
   3. கொள்வனவு நாளேடானது ரூபா1,000 வினால் மிகையாகக் கூட்டி எழுதப்பட்டிருந்தது.
   4. வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெற்ற ரூபா 6,560 ஆனது வருமதியாளர் பேரேட்டிலும் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் பதியப்படாதிருந்தது.
   5. ரூபா 2,750 இற்கு வாங்கப்பட்ட கணிப்புப் பொறி, கொள்வனவு நாளேட்டிற் பதியப்பட்டிருந்தது. (கொள்வனவு நாளேடானது பண்டங்களின் கொள்வனவு மாத்திரம் பதிவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

நீர் பின்வருவனவற்றைத் தயாரிக்கும் படி பணிக்கப்படுகிறீர்.
அ) வழுக்களைச் சீராக்குவதற்கு அவசியமான குறிப்பேட்டுப் பதிவுகள்
ஆ) கம்பனியின் ஏடுகளிற் தொங்கற் கணக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) பிரபாத் அன்ட் கம்பனியின் பரீட்சை மீதியானது இணங்கவில்லை அப்பரீட்சை மீதியின் வித்தியாசத்தைத் தொங்கற் கணக்கிற்குப் புகுத்தியதன் பின்னர் அது சமப்படுத்தப்பட்டது. ஆண்டுக் கணக்காய்வின் போது பின்னர் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. விற்பனை நாளேட்டின் பக்கம் 12 ரூபா 4,000 எனும் தொகையால் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது.
2. காசேட்டினது பெறுவனவுப் பக்கத்தின் கழிவீட்டு நிரல் ரூபா 1,100 என்பதற்குப் பதிலாக ரூபா 1,200 எனப் பிழையாகக் கூட்டப்பட்டிருந்தது.
3. செலுத்தப்பட்ட தரகுக் கூலியான ரூபா 2,200 ஒரு தடவை அனுமதிக்கப்பட்ட கழிவீட்டுக் கணக்குக்கும் மீண்டும் தரகுக் கூலிக் கணக்கிற்குமாக இரு தடவைகள் பதியப்பட்டிருந்தது.
4. கே.நாராயணன் என்பவரிடமிருந்து ரூபா 10,500 இற்குச் செய்யப்பட்ட பண்டங்களின் கொடுப்பனவொன்று கொள்வனவு நாளேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்த போதும் பிழையாக, அவரது சொந்தக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. (சொந்தக் கணக்கு பொதுக் பேரேட்டில் பேணப்பட்டது)
5. நானாவிதச் செலவுகள் ரூபா 456 காசேட்டில் பதியப்பட்டதெனினும் பதியப்படவில்லை.
6. காசேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்த அஞ்சற் செலவு ரூபா 310 பேரேட்டில் ரூபா 130 ஆகப் பதியப்பட்டிருத்தல் தொடக்க மீதியைக் காட்டி தொங்கற் கணக்கைத் தயாரிப்பதுடன் மேற்போந்த வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளையும் தருக.

17) வரையறுத்த பொறுப்புக் கம்பனியொன்றின் பேரேட்டிலிருந்து 1988 டிசம்பர் 31 இல் பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. இவ்வித்தியாசம் தொங்கற் கணக்கொன்றிலே பதிவு செய்யப்பட்டது. பின்னர் வழுக்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

1. தட்டச்சொன்றைப் பழுது பார்த்தற்கென செலுத்திய ரூபா 750 தொகை அலுவலக உபகரணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
2. காசு விற்பனைகளாகிய ரூபா 357 தொகை காசேட்டில் சரியாகப் பதிவுற்றிருந்த போதிலும் கொள்வனவுக் கணக்கில் ரூபா 537 தொகையாக வரவு வைக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1988 டிசம்பர் மாதவாடகைக்குப் பதிலாக ரூபா 800 பெறுமதியான பொருட்கள் கட்டட உரிமையாளருக்கு அளிக்கப்பட்டன. இவை விற்பனைக் கணக்கில் செலவுப் பக்கத்திலும் கட்டட உரிமையாளரின் ஆட்குறிக்கும் கணக்கில் வரவுப் பக்கத்திலும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

4. இறைகளின் கணக்கிலிருந்த வரவு நிலுவை ரூபா 400 பரீட்சை மீதியில் விடுபட்டிருந்தது.

5. ரூபா 835 உட்திரும்பல்கள் வாடிக்கையாளரின் கணக்கில் சரியாகப் பதியப்பட்டிருந்த போதிலும் வெளித்திரும்பல் கணக்கில் செலவில் பதியப்பட்டிருந்தது.

6. கொள்வனவுக் கிரயப்பட்டியலொன்றிலிருந்த ரூபா 1,750 தொகை வழங்குனர் கணக்கில் செலவுப் பக்கத்தில் பதியப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு நாளேட்டில் பதிவுறாமல் இருந்தது.

மேற்போந்த வழுக்களை சீராக்குவதற்கான நாட்குறிப்புக்களைக் காட்டுக.

18) ஒரு சில்லறை வியாபாரத்தின் உடமையாளரான ரன்பண்டா தமது வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காகப் பயிற்சியாளரான கணக்குப் பதிவாளர் ஒருவரை அமர்த்தியிருந்தார். வரி விவரத்திரட்டை உரிய திகதிக்கு முன் சமர்ப்பிப்பதற்காக அவர் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்குமாறு கணக்குப் பதிவாளரைப் பணித்தார். பின்வரும் ஐந்தொகை 1984 டிசம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டது.

பொறுப்புகள்			நிலையான சொத்து			
	ரூபா	ரூபா		ரூபா கொள் விலை	ரூபா திரண்ட தேய்மானம்	ரூபா தேறிய மதி
மூலதனம்			பொறித் தொகுதியும்			
84.01.01 இல் மீதி	60 000		இயந்திரமும்	40 000	12 000	28 000
ஆண்டுக்கான இலாபம்	13 150	73 150	மோட்டார் கார்கள்	22 500	4 100	18 400
ஈட்டுக்கடன்		30 000	தளபாடங்கள்	15 000	2 000	13 000
கடன்கொடுத்தோர்		7 250		77 500	18 100	59 400
			முதலீடுகள்			21 000
			பண்டக்கையிருப்பு			11 500
			கடன்பட்டோர்			9 300
			வங்கியிலுள்ள காசு			9 200
		110 400				110 000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கணக்குகளை மீளப் பார்வையிட்டு வழுக்கள் எவையேனும் இருப்பின் அவற்றைத் திருத்துமாறு ரண்பண்டா உம்மைக் கேட்டுக் கொண்டார். பரிசீலனை செய்ததில் பின்வரும் சீராக்கங்கள் கணக்கிற் கொள்ளப் படவில்லை என்பதை நீர் காண்கின்றீர்.

- மோட்டார் கார்களைப் பழுது பார்த்தற் செலவு 1 500/= மோட்டார் கார் கணக்குக்கு ஒரு மூலதனச் செலவாகப் பதியப்பட்டது. தேய்மான வீதம் ஆண்டுக்குக் கொள்விலையில் 5% ஆகும்.
- ஐயக் கடன்களின் பொருட்டுக் கடன்பட்டோரின் 5% ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற முடிவு புறக்கணிக்கப்பட்டுள்ளது.
- 1984.12.31 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட 1000/= க்கான கொள்வனவு விலைப்பட்டியல் கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பண்டங்கள் 1985.01.05 இலேயே வியாபார நிலையத்துக்குக் கிடைத்தன. வியாபார நிலையத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிராத எந்தக் கையிருப்பையும் கணக்கிற் கொள்ளாது விடுவதே இந்த வியாபாரத்தின் கொள்கையாகும்.
- முதலீடுகளிலிருந்து 400/= பங்கிலாபம் வங்கிக்கு நேரே செலுத்தப்பட்டிருந்ததை வங்கிக் கூற்று காட்டுகிறது. ஆனால் கணக்கேடுகளில் எவ்விதமான பதிவு செய்யப்படவில்லை.
- கட்டடத்தின் வாடகையாக 1994.01.01 இலிருந்து ஆரம்பமாகும் 15 மாதகாலப்பகுதிக்கு 4 800/= கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட முழுத்தொகையும் இந்த ஆண்டின் இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- ஈட்டுக் கடன் 1984.01.01 இல் 12 ஆண்டு வட்டிக்கு எடுக்கப்பட்டது. வட்டி தொடர்பாக கணக்கேடுகளில் ஒரு பதிவும் செய்யப்படவில்லை.

நீர் தயாரிக்க வேண்டியவை.

1) குறித்த ஆண்டுக்கான இலாபத்திற்குத் தேவையான சீராக்கங்களை காட்டும் ஒரு கூற்று.
2) 1984 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திருத்திய ஐந்தொகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) ரங்கன் என்பவர் 30 ஜூன் 1983 இல் பின்வரும் ஐந்தொகையைத் தயாரித்து உள்ளார்.

பொறுப்புகள்			நிலையான சொத்து			
	ரூபா	ரூபா		ரூபா கொள் விலை	ரூபா திண்ட தேய்பெறுமானம்	ரூபா தேறிய மதி
மூலதனம் மீதி 01.07.82	45 000		பொறி விருட்சமும் பொறியும்	33 750	11 250	22 500
(+)			வாகனங்கள்	13 500	9 000	4 500
30.6.83வரைவருடலாபம்	11 250	56 250		47 250	20 250	27 000
கடன்கொடுத்தோரும்		7 250	முதலீடு(கொள் விலையில்)			4 500
பொறுப்பொதுக்கமும்		18 000				
வங்கி மேலதிகபற்று		2 250	கடன்பட்டோர்		29 250	
			கழிக்க: (அறவிடமுடியாக் கடன் பெறுப் பொதுக்கம்)		(2 250)	27 000
						17 300
						700
		76 500				76 500

ரங்கனின் புத்தகங்களின் உமது பரிசோதனையின் போது பின்வருவன வற்றை நீர் காண்பீர்.

- வங்கிக் கூற்றில் 400/= பங்கிலாபம் வங்கிக்கு நேராகப் பெறப்பட்டதெனத் தோன்றுகின்றது. ஆனால் ரங்கனின் புத்தகங்களில் ஒரு பதிவும் இல்லை.
- மேலதிகமான ஒரு பொறியின் கொள்விலையான 4 000/= திருத்துதல் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ஆம் வருடத்தில் இப்பொறிக்கு கொள்விலையில் 10% பெறுமானத் தேய்வு இடவேண்டுமென இனங் காணப்பட்டது.
- 31 மார்ச் 1993 இல் ஒரு அரை வருடத்துக்கான வாடகையாக 2 400/= கொடுக்கப்பட்டுள்ளது 30 ஜூன் 83 வரை கால் ஆண்டுக்கான வாடகைக்கு ஒரு பொறுப் பொதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் 31 மார்ச்சில் செய்யப்பட்ட கொடுப்பனவானது 30 செப்டம்பர் 1983 வரையிலான ஓர் அரை ஆண்டுக்குச் செலுத்த வேண்டிய வாடகை முற்பணமாகும்.
- 1 000/= கடனுக்கு எதிராக தராக 500/= பொறுப் பொதுக்கம் ஏற்படுத் தப்பட்டது. அக்கடன் அறவிடமுடியாக் கடனெனவும் அது பதிவழிக்கப்பட வேண்டுமெனவும் இணங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

→ 5000/= காசாகவும் அத்துடன் பகுதி கைமாற்றாக ஒரு வாகனத்துக்கு 2000/= அனுமதித்தலையும் கொடுத்து ஒரு புதிய வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. கைமாற்றாகக் கொடுத்த வாகனத்தின் கொள்விலை 600/= ஆகும். விற்பனைத் திகதி வரை அதற்கு இடப்பட்ட மொத்தப் பெறுமானத் தேய்வு 5000/= ஆகும்.

வாகனக் கொள்வனவு சம்பந்தமாக காசுக் கணக்கில் 5000/= செலவும், வாகனக் கணக்கில் 5000/= வரவும் மட்டுமே பதிவுகளாக இடப்பட்டுள்ளன. (புதிய வாகனத்தின் பெறுமானத் தேய்வைப் புறக்கணிக்க) பின்வருவனவற்றைத் தயாரிக்கும்படி நீர் கேட்டுகப்படுகின்றீர்.

1) வருட இலாபத்தில் தேவையான செம்மையாக்கல்களைக் காட்டும் ஒரு கூற்று.
2) 30 ஜூன் 1983 இல் உள்ளபடியான திருத்தம் செய்யப்பட்ட ஒரு ஐந்தொகை.

20) பின்வரும் வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தந்து அத்தகைய திருத்தங்களை வியாபார நிலையத்தின் இலாப நட்டக் கணக்கிலும், ஐந்தொகையிலும் ஏற்படுத்தும் விளைவுகளையும் விளக்குக.

→ பெற்ற கழிவு 400/= குறைத்துக் கணக்கிடப்பட்டது.
→ வாடிக்கைக்காரர் ஒருவரின் வரவுப் பக்கம் 1800/= கூட்டிக் கணக்கிடப் பட்டது.
→ சட்டமுறைச் செலவுகளுக்கான 500/= கொடுப்பனவொன்று காசேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.
→ உட்திரும்பிய சக்கேட்டின் மொத்தமான 1300/= வெளித்திரும்பிய சரக்குக் கணக்கின் செலவுப் பக்கத்திற் கொண்டு பதியப்பட்டுள்ளது.
→ ரூபனிடமிருந்து பெற்ற 750/= தொகை, காசேட்டில் உரிய முறையில் பதியப்பட்டு அவருடைய கணக்கில் 570/= வாகக் கொண்டு பதியப் பட்டுள்ளது.
→ கட்டடங்களில் தேய்மானமாகப் பதிவழிக்கப்பட்ட 5000/= தொகை தேய்மானக் கணக்கிற்கு கொண்டு சென்று பதியப்பட்டிருக்கவில்லை.
→ 250/= ஒரு விடயம் உட்திரும்பிய சரக்கேட்டில் பதியப்பட்டு அச்சரக்கினைத் திருப்பியனுப்பிய வாடிக்கைக்காரரின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1940/= ஒரு விற்பனை விடயம் விற்பனைக் கணக்கில் 1490/= கொண்டு பதியப்பட்டிருந்தது.
- வியாபாரத்தில் பயன்படுத்துவதற்காக ஆண்டுக் காலத்தில் 15 000/= கொள்வனவு செய்யப்பட்ட புதிய பொறித் தொகையும், இயந்திர சாதனமும், கொள்வனவுக் கணக்கிற்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
- மின்சாரக் கணக்கில் ஒரு வரவு மீதியான 500/= பரீட்சை மீதியில் பிழையான பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WEBSTERS ACADAMY

PEER QROUP CLASES
GOODSHED ROAD
VAVUNIYA.

வர்த்தகப் பிரிவுகளுக்கான எமது
ஆசிரியர் குழாம்

கணக்கீடு	K.T. சீலன்
பொருளியல்	M.N. சுபாஸ்
வர்த்தகம்	G. ரமேஸ்
ஆங்கிலம்	P. தீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org